பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 13 புதன்கிழமை 30.10.2024 கதிர் 357

### இது ரகசியம் அல்ல!

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக சகாதேவன் இன்று பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரிகின்றது. சபையின் தலைவராக இரேனியஸ் ☞2

## மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு இதுவரை எதுவும் கிடைக்கவில்லை

### ருவன் விஜேவர்த்தன கொந்தளிப்பு

மாற்றத்தை எதிர்பார்த்தே மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருந்தார்கள். ஆனால் மக்கள் எதிர்பார்த்த எந்த மாற்றமும் இதுவரை இடம்பெறவில்லைஎன்றுபுதியஜனநாயக முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் வழிடத்தல் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு அதிகாரத்துக்கு வந்தது முதல் முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைககள், அவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை இல்லாமல் செய்வதில் குறியாக இருந்து வருகிறது. அது தொடர்பாக மாத்திரமே ஜனாதிபதியும் கதைத்து வருகிறார். ஆனால் இதனையும்விட நாட்டில் மேற்கொள்ள வேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன.

ரணில்விக்ரமசிங்கதலைமையிலான ஆளும்தரப்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக எடுத்த சில தீர்மானங்கள் காரணமாகப் பொருட்களின்விலைஅதிகரித்தது. ஆனால் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் படிப்படியாக அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. ☞8

## நாயைச் சுட்டுக்கொன்ற முன்னாள் கப்டன் கைது

அயல் வீட்டில் இருந்த வளர்ப்பு நாயை சுட்டுக் கொன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஓய்வுபெற்ற இராணுவக் கப்டன் ஒருவர் கந்தானை பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் நேற்று கைது செய்யப்பட்டார்.

நாயை சுடப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஏர் ரைபிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கந்தானை பொல்பிட்டிமூகலனை ☞8

## ஆசிரிய ஆலோசர்களுக்கு புதிய அளவுத்திட்ட சம்பளம்

### வழங்கப்படும் என நீதிமன்றிற்கு அறிவிப்பு

இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையின் சம்பள அளவுகளில் காணப்படும் முரண்பாடுகளை நிவர்த்தித்து, சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாக சட்ட மா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு ☞8

## வெளிநாடுகளிடமிருந்து புதிதாக கடன் பெறவில்லை

### அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

நாட்டில் புதிதாக பணம் அச்சிடப்படவில்லை என்றும், எந்தவொரு நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்தோ எந்தவகையிலும் கடன்கள் பெறப்படவில்லை என்றும் அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளரும், புத்த சாசனம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் ☞8

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சறுக்குகின்றது அநுரவின் ஆட்சி

### சுமந்திரன் கண்டனம்



பயங்கரவாதத்தடைச்சட்ட விவகாரத்தில் அநுரகுமார திசநாயக்கவின் ஆளும் தரப்பு சறுக்கத் தொடங்கிவிட்டது என்று கண்டித்திருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சுமந்திரன்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் ஆளும்தரப்பிலிருந்து கடந்த சில நாள்களாக வரும் கருத்துக்கள் குறித்தே அவர் இந்தக் கண்டனத்தைப் பதிவு செய்திருக்கின்றார். தனது 'எக்ஸ்' தளத்தில் அவர் இந்த எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதான வாக்குறுதியை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தனது தேர்தல் அறிக்கையில் மட்டும் சொல்லவில்லை ☞2

## 'பிராந்தியக் கூட்டு' வசதிக்காக விண்ணப்பிக்கிறது இலங்கை

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தக உத்தேச ☞8

## ஊவா தமிழ் பாடசாலைகளுக்கு வெள்ளிக்கிழமையும் விடுமுறை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஊவா மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு வெள்ளிக்கிழமையும் விசேட விடுமுறை வழங்கப் ☞8

## ரஞ்சனின் கட்சிக்கு எதிராக தேர்தல் விதிமீறல் முறைப்பாடு

ரஞ்சன் ராமநாயக்க தலைமையிலான ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சி தேர்தல் விதிமுறைகளை மீறி பிரசாரம் செய்வதாக கம்பஹா மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் எமது மக்கள் சக்தி கட்சியினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்து.

கம்பஹா மாவட்ட வேட்பாளர் குழுவின் தலைவர் ஜீவன் சதுரங்க ஸ்ரீமால் தெரிவிக்கையில், ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியினரின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப் படுத்தக் கோரி குறித்த முறைப்பாடளிக்கப் பட்டுள்ளது. ☞8



## அரச ஊழியர்களின் நம்பிக்கையை தேசிய மக்கள் சக்தி ஆட்சி இழந்தது

### நிமல் லன்ஸா தெரிவிப்பு

6 மாதங்களுக்கு ஒருமுறை அரசு ஊழியர்களின் சம்பளத்தை மேலும் உயர்த்துவோம் என்று தெரிவித்த ஜே.வி.பி, இன்று அதை மறுக்கிறது. அரசு ஊழியர்கள் திசைகாட்டி மீது மிகுந்த நம்பிக்கை வைத்து வாக்களித்தனர். அந்த நம்பிக்கையை ஆளும்தரப்பு தற்போது இழந்துள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார். ☞8

## சம்பள அதிகரிப்புக்கு நிதி இல்லையென ஆளும் தரப்பு எதற்கு பொய் கூறுகிறது?

### ஹர்ஷ டி சில்வா கேள்வி

நிதி அமைச்சின் அறிக்கைக்கு அமையவே கடந்த அரசாங்கம் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே திறைசேரியில் இதற்காக நிதி ஒதுக்கப்படவில்லை எனக் ☞8

## உண்மையான மாற்றத்துக்காக எமக்கு நாடாளுமன்ற அதிகாரமும் வேண்டும்

### எமது கொள்கைகளை நடைமுறைப்படுத்த அதைத் தாருங்கள் என்கிறர் பிரதமர் ஹரினி

உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்திக்கு நிறைவேற்று அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது நாடாளுமன்ற அதிகாரமும் வேண்டும். எமது கொள்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய நாடாளுமன்றத்தை உருவாக்குங்கள் என்று பிரதமர் ஹரினி தெரிவித்தார்.

இந்த நாட்டை புதிய மறுமலர்ச்சிக்கு கொண்டு செல்வதற்காகவே தேசிய மக்கள் சக்தி தனது பயணத்தை ஆரம்பித்தது நிகழ்ச்சிகளை நடத்தியோ அல்லது மக்களுக்கு பொய் சொல்வதோ அல்ல என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று கொழும்பில் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றிக்காக நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

செல்வின் தேசிய மக்கள் சக்தியால் முன்னர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், அவர் மீது ஊழல் முறைப்பாடுகள் இருக்கின்றன, விதி மீறல்களில் ஈடுபட்டிருக்கின்றார் என்று தெரிவித்து சபையின் ஒருங்கிணைந்த தொழிற்சங்கம் அமைச்சர் விஜித ஹேரத்திற்கு கடிதம் எழுதியிருந்தது.

சபையின் வேலைப் பணிப்பாளராக செல்வின் இருந்தபோது பனை வெல்ல உற்பத்தி இயந்திரக் கொள்வனவில் ஊழல் இடம்பெற்றதாகத் தெரிவித்த தொழிற்சங்கம், எதற்கும் ஒன்றுக்கு இரண்டு முறை உங்கள் நியமனம்பற்றிச்சிந்தியுங்கள்என்றுஅமைச்சர் விஜித ஹேரத்தைக் கேட்டிருந்தது. சங்கத்தின் இந்த எதிர்ப்புக் கடிதத்திற்கு மத்தியிலும் செல்வினுக்கு தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) ஆளும்தரப்பு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவி வழங்கியது.

ஆனால், இரண்டே வாரங்களில் அவரை மாற்றிவிட்டு சகாதேவனுக்கு அந்தப் பதவியைக் கொடுத்திருக்கிறது. செல்வினுக்குநியமனம்வழங்கப்படுவதற்கான எதிர்ப்புக் குறித்து ஒக்டோபர் 21 எனது பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தேன். அந்தக் கடிதத்திற்கு பனை அபிவிருத்திச் சபையிலிருந்து அமைச்சருக்கு அனுப்பப்பட்ட விளக்கம் குறித்தும் ஒக்டோபர் 23 தெரியப்படுத்தியிருந்தேன். அந்த விளக்கத்தில் வெல்ல இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்ட காலத்தில் செல்வின் வேலைப் பணிப்பாளராகப் பதவியில் இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதேநேரம் சபைக்குரிய வாகனத்தை சாரதி இன்றி எடுத்துச் சென்ற செல்வின் அதனை விபத்துக்குள்ளாக்கினார் என்றும், விசாரணைகளின் பின்னர் அதன் திருத்த வேலைகளில் ஒரு பகுதியை அவர் செலுத்திவிட்டார் என்றும்கூடத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விளக்கங்கள் எல்லாம் அமைச்சருக்குத்திருப்தியளித்திருக்கவில்லைப் போலும் அதைவிட முக்கியம் தொழிற்சங்கத் தரப்பு ஒன்று எதிர்ப்புத் தெரிவித்த பின்னர், ஒரு நபரை சபைத் தலைவராக நியமிப்பது தேசிய மக்கள் சக்தியின் இடதுசாரிக் கட்சி என்கிற விம்பத்துக்கும் இழுக்கு என்று நினைத்து அமைசச்சர் செல்வினைத் தூக்கிவிட்டுப் புதிய தலைவரை நியமித்துவிட்டார். இருந்தாலும் இந்த விடயத்தை அரச நிர்வாகத்திற்குள் ஜேவிபியின் தலையீடு என்பதாகக் காட்டி அழுத்தம் கொடுப்பதற்கான முயற்சிகள் ஒருபுறம் எடுக்கப்படுகின்றன.

பனை அபிவிருத்திச் சபை தலைவர் பதவி என்பதே ஒரு அரசியல் நியமனம்தான். அதுவொன்றும்தகுதி அடிப்படையிலான பதவி நியமனம் அல்ல. அப்படியிருக்கும்போது அந்த நியமனத்தில் அரசியல் தலையீடு என்று குற்றஞ்காண்பது அர்த்தமற்றதொன்று.

இப்படிஊழல்குற்றச்சாட்டுகிளப்பப்பட்டதன் மூலம்இரண்டேவாரங்களில்தனதுபதவியை இழந்திருக்கக்கூடியவரான செல்வின், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கிய தரப்புக்களில் மிக முக்கியமானவர். தமிழ் மக்கள் பொதுச் சபையின் மூலமாக பொதுக் கட்டமைப்பின் தலைமைப் பீடத்தில் இடம்பிடித்த 7 பேரில் செல்வினும் ஒருவர். பொதுக் கட்டமைப்பில் இருந்த 5 கட்சிகள் அரியநேத்திரனின் சங்கு சின்னத்தையும் திருடிக்கொண்டு தனியாவர்த்தனம் பாடத் தொடங்கிய பின்னரும் இந்தக் கட்சிகளையும் சேர்த்து அணைத்துக்கொண்டு மீண்டும் பொ-தக் கட்டமைப்பை உருவாக்கப் போகின்றோம் என்று கூறிவருபவர்.

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் விசுவாசமானவர் என்று அறியப்பட்டவர். ஆழிப்பேரலை (சுனாமி) பேரிடருக்குப் பின்னர்ரணிலும்புலிகளும்பேசிஉருவாக்கிய பிடொம்ஸ் எனப்பட்ட கட்டமைப்பிற்குப் புலிகளின் சார்பில் நிர்வாகியாகப் பரிந்துரைக்கப்பட்ட ஒருவர். அந்தக் கட்டமைப்பு அரசமைப்புக்கு முரணானது என்று நீதிமன்றத்திற்குச் சென்று அதற்குத் தடை வாங்கியது ஜேவிபிதான். இன்று அதே ஜேவிபிதான் அவரை பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமித்து பின்னர் நீக்குகின்றது.

''என்னதான் நடக்கும் நடக்கட்டுமே, இருட்டினில் நீதி மறையட்டுமே, தன்னாலே வெளிவரும் தயங்காதே" என்கிற எம்.ஜி.ஆர். பாட்டுத்தான் ஞாபகத்திற்கு வருகிறது.

..................

ஒரு பொய் சொன்னால் ஒன்பது பொய் சொல்லவவ்ணடி வரும் என்று மூத்தவர்கள் சொல்வார்கள். இதையே இப்போது ஒரு களவு செய்தால் ஒன்பது களவு செய்யவேண்டி வரும்என்றும்முன்னாள்ஆட்சியாளர்களைப் பார்த்துச் சொல்லவேண்டி வரும் போல உள்ளது. எதற்கு இந்தப் பீடிகை என்றுதானே பார்க்கிறீர்கள். விசயம் இருக்கிறது.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவை உள்ளே தூக்கிப் போட்டுவிட்டார்கள். மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதியப்படாமல் பயன்படுத்தப்பட்டு வந்த அதிசொகுசு வெளிநாட்டு வாகனம் ஒன்றை நாட்டுக்குள் கடத்தி வந்தவர் அவர்தான் என்கிற குற்றச்சாட்டின்கீழ்தான்அவர்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர்மட்டுமலல்ல, முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராகவும் இதுபோன்றதொரு குற்றச்சாட்டுப் பாய்வதற்குத் தயாராக உள்ளது. அவரது மனைவியின் வீட்டிலிருந்து இதேபோன்று பதிவு செய்யப்படாத அதிசொகுசு கார் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அந்தக் காரை, தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனார் என்று கூறப்படும் தனது முன்னாள் தனிப்பட்ட உதவியாளர் ஒருவரே அங்குகொண்டுவந்துநிறுத்தினார்என்றுகூறித் தப்பிவிடுவதற்கு லொஹான் முயற்சிக்கிறார். ஆனால்அதையெல்லாம்தாண்டிஅவரையும் தூக்கி உள்ளே வைப்பார்கள் என்றே பேச்சடிபடுகின்றது.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால்,வாகனஇறக்குமதிக்குமுழுமையாகத் தடை விதிக்கப்பட்டிருந்த கடந்த இரண்டு மூன்றுஆண்டுகளில்ஆட்சியில்இருந்தவர்கள் தமக்காக களவாக அதிசொகுசு வாகனங்களை நாட்டுக்குள் தருவித்து, பதிவு செய்ய முடியாததன் காரணமாக பொய்யான இலக்கத் தகடுகளுடன் பயன்படுத்தி வந்திருக்கிறாரகள் என்பதைத்தான். ஆக, வாகனங்களை இறக்க மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் தடை இருந்தது என்றாலும் அரசியல்வாதிகள் தமது சொகுசில் எந்தக் குறைவும் இல்லாமல் இருந்திருக்கிறார்கள்.

இப்போது விவகாரம் என்னவென்றால் மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்திலிருந்து பதிவு செய்யப்படாத, அதாவது எந்தப் பதிவுகளுமற்ற புதிய வாகனம் புத்தகங்கள் சில காணாமற்போயிருப்பதாக கொழும்பு பொரளைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதுதான்.

க்கின்றனர்.

மோட்டார் வாகனங்களின் 12 வெற்று புத்தகங்கள் காணவில்லை என வணிக வாகன ஒதுக்கீட்டு துறை அதிகாரி ஒருவர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். காணாமற்போனபுத்தகங்களின்இலக்கங்களும் பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் அந்தப் புத்தகங்கள் மஞ்சள் நிறத்தில் அச்சிடப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

இந்தப் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்த அலுமாரி உடைக்கப்படாமலேயே வாகனப் புத்தகங்கள்காணாமற்போயிருக்கின்றனவாம். இருந்தாலும் அந்த அலுமாரி அமைந்திருக்கும் இடத்தைத் தெளிவாகப் பார்க்கக்கூடிய வகையில் ஒரு சிசிரிவி கமெரா இருப்பதால் அதைக் கொண்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமைச்சர்களின் கைதுக்கும், பதியப்படாமல்பயன்படுத்தப்பட்டகார்களுக்கும், இப்போது வாகனப் பதிவுப் புத்தகங்கள் காணாமற்போனமைக்கும் இடையில் என்னைப் போலவே உங்கள் மூளைகளும் முடிசுப்போடுகின்றனஅல்லவா? அதனால்தான் ஒரு களவு செய்தால் இனி -ஒன்போது களவு செய்ய வேண்டியிருக்கும் போலயே என்று தெரித்தேன்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## பயங்கரவாதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள சுமந்திரன், தேசிய மக்கள் சக்தியும் ஜேவிபியும் அந்தச் சட்டத்தை ஒழிப்போம் என்று அறுதிபடத் தீர்மானித்த பல நிகழ்வுகளில் தானே நேரடியாகக்கலந்துகொண்டுபேசியுமிருக்கிறார் என்பதையும் சுடட்டிக்காட்டியுள்ளார்.

''தேசிய மக்கள் சக்தி இன்றுவரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்போம் என்ற தெளிவான நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கின்றது. அந்தச் சட்டத்தை ஒழிக்கும் வாக்குறுதியை ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாத்திரம் நீங்கள் சொல்லவில்லை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்போமென உங்களது கட்சி அறுதிபடத்தீர்மானித்தபலநிகழ்வுகளிலேநானே கலந்துகொண்டு, பேசியும் இருக்கின்றேன். இப்போதுசறுக்கத்தொடங்கிவிட்டீர்கள்!"-என்று ஜனாதிபதி அநுரவுக்கு தெரிவித்திருக்கிறார் சுமந்திரன்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி நிர்வாகம், பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக விதிகள்) சட்டத்தில் திருத்தங்களைச் செய்து அதைத் தக்கவைத்துக் கொள்ளும் என்று ஜனாதிபதி செயலகப் சட்டத்துறைப் பணிப்பாளர் சட்டத்தரணி விஜேபண்டாரவை மேற்கோள்காட்டி 'தி டெய்லி மோர்னிங்' ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பிரச்சினை இல்லை, அதனைப்பயன்படுத்துவதிலேயே பிரச்சினை இருப்பதாக அவர் தெரிவித்திருக்கின்றார் எனவும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகள் உட்பட பல தரப்பினரும் இலங்கை அதிகாரிகளை பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குமாறு நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர், இது பொதுவாக 'கடுமையானசட்டம்'என்றுஎல்லோரினாலுமே குறிப்பிடப்படுகிறது.

ஆனால், 'சிவில் ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தைதவறாகப்பயன்படுத்துவதைப் பற்றிய பிரச்சினையே இது, நாங்கள் அத்தகைய செயற்பாடுகளை அனுமதிக்க மாட்டோம். நம்பகமானபுலனாய்வுத்தகவலின் அடிப்படையில் மட்டுமே அந்தச் சட்டம் பயன்படுத்தப்படும், மேலும் இது அரசியல் பழிவாங்கலுக்காகவும் பயன்படுத்தப்படாது. சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படாதபோது, எந்த பிரச்சனையும் வராது' என்று 'தி டெய்லி மோர்னிங்'பத்திரிகைக்குத்தெரிவித்திருக்கிறார் விஜேபண்டார.

'நம் நாட்டின் சட்டத்தில் தூக்குத் தண்டனையும் அடங்கும், ஆனால், அதை அமல்படுத்தும் அதிகாரம் பெற்ற ஜனாதிபதிகள் ஒரு கொள்கையாக அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதைத் தவிர்க்கிறார்கள். அதேபோல், ஜனாதிபதி மன்னிப்பு எங்கள் சட்டத்தில் அனுமதிக்கப்படுகிறது, ஆனால் கடுமையான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட தனிநபர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுவதில்லை" என்று சட்டத்தைச் சரியாகப்பயன்படுத்தினால்பிரச்சினைஇல்லை என்பதற்கு உதாரணம் தெரிவித்துள்ளார் விஜேபண்டார.

1979 இல் ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் பயங்கரவாதத் தடைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1982இல் அது நிரந்தரமானது. இந்தச் சட்டம் சிறுபான்மையினரை மிக மோசமாகப் பாதித்துள்ளது, எந்தக் குற்றச்சாட்டும் இன்றி நீண்டகாலமாக ஒருவரை பொலிஸாரின் காவலிலும் நீதிமன்றக் காவலிலும் வைக்க அனுமதிக்கிறது. பெரும்பாலும் சர்வதேச சட்ட நடைமுறை தரங்களை மீறுகிறது.

இந்தச் சட்டத்தை மாற்றி புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று மைத்திரி - ரணில் ஆட்சியில் உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றாகப் புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டமும் மிக மோசமானதாக இருந்ததால் அதற்கும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. 2021 ஜனவரியில் புதிய சட்டத்திற்கான வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஆனால், அதுவும் முந்தைய சட்டத்தில் இருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தவறிவிட்டன என்று உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டின. இதையடுத்த அந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படாமலேயே விடப்பட்டது.

# 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் விவகாரம் குறிதுப் புதிய விசாரணை விரைவில்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தினால் இலங்கை கடற்பரப்புக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டதோடு, இவ்விடயத்தில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே இது தொடர்பில் புதிய விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்என அமைச்சரவைபேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீவிபத்தால் இலங்கை கடற்பரப்புக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் இலங்கை மீனவர்கள் தொழில் ரீதியில் கடும் இழப்புக்களை எதிர்கொண்டனர்.

அதேபோன்று இந்த விவகாரத்தில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவேஇதுதொடர்பில்புதியவிசாரணைகளை நாம் விரைவில் நிச்சயம் ஆரம்பிப்போம்.

இது தொடர்பில் ஏற்கனவே முன்னெடுக் கப்பட்டுள்ள விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைககளையும், நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கைக ளையும் அடிப்படையாகக் கொண்டு அந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# கம்மன்பிலவின் தேவைக்காக எமது விசாரணைகள் மாறாது

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

ஈஸ்டர் தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.ஐ.இமாம் தலைமையிலான குழுவின் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இமாம் குழு தகவல் அறிந்து கொள்வதற்காகவே நியமிக்கப்பட்டது. அது உத்தியோகபூர்வ விசாரணை குழுவும் இல்லை. அவ்வாறு இருக்கையில் அந்த குழுவின் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாது. உதய கம்மன்பிலவின் தனிப்பட்ட தேவைகளுக்காக எங்களின் வேலை திட்டங்களையும் விசாரணைகளையும் மாற்றிகொள்ள மாட்டோம். முறையான விசாரணைகளை முன்னெடுப்போம் என்றார்.

# தபால் மூல வாக்களிப்பு இன்று தொடங்குகிறது

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிலும்தபால்மூலவாக்களிப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று தவிர்ந்து, அடுத்த மாதம் 4ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்புக்குச்சந்தர்ப்பம்வழங்கப்பட்டுள்ளது.

முப்படை முகாம்களிலும், அனைத்து அரச நிறுவனங்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4ஆம் திகதியும் அஞ்சல் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7 மற்றும் 8ஆம் திகதிகளில் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

தபால்மூலம்வாக்களிப்பதற்காக 750,000 பேர்விண்ணப்பித்திருந்தனர்என்றுதேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையேனும் பதுளையில் தக்கவைத்தாகவேண்டும்

## அருணாச்சலம் அரவிந்தகுமார் கோரிக்கை



பதுளை மாவட்டத்தில் பெரும்பான்மை வாக்காளர்கள் சுமார் ஆறுஇலட்சம்பேர்காணப்படுகின்றனர். சிறுபான்மை வேட்பாளர்களாக ஒரு இலட்சம் பேரே உள்ளனர். ஆகவே இந்த ஒரு இலட்சம் வாக்காளர்களே மேற்படி ஆறு இலட்சம் சிங்கள வாக்காளர்களுடன் முட்டி மோதி போட்டியிட வேண்டி இருக்கிறது. அப்படியானால் நூற்றுக்கணக்கான வேட்பாளர்கள் களமிறங்கி இருக்கின்ற நிலையில் தமிழ் பிரதிநிதித்துவத்துக்கு கேள்வி ஒன்று எழுந்திருக்கிறது. அது மாத்திரமன்றி ஒருவிதமான அச்சமும் எழுந்திருக்கின்றது இந்தநிலைமையை மாற்றியமைக்க வேண்டுமானால் மக்கள் தீர்க்கமாக சிந்தித்து தமது வாக்குகளை மிகச்சரியான முறையில் பிரயோகிக்க வேண்டும் என ஐக்கிய தேசியகூட்டமைப்பின்பதுளைமாவட்ட முதன்மைவேட்டாளர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

பூனாகலை தோட்டத்தின் எல்எல்ஜி பிரிவில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

வேட்பாளர் அரவிந்தகுமார் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

பதுளை மாவட்டத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தையேனும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற காரணத் தேவையின் தீர்மானம் மக்களிடத்திலேயே இருக்கிறது. பதுளை மாவட்டத்தின் அனைத்து தோட்டங்களுக்கும் பிரதேசங்களுக்கும் சென்று வாக்கு கேட்கும் உரிமையும், தைரியமும் எனக்கு இருக்கிறது.

ஏனெனில் நான் அனைத்து பிரதேசங்களையும் சமமாக பார்க்கின்றவனாக இருக்கிறேன். அனைத்து பிரதேசங்களினதும் தேவை அறிந்து செயல்பட்டவனாக காணப்படுகிறேன்.

பதுளை மாவட்டத்தின் தேவை உணர்ந்து மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி இருப்பது மகிழ்ச்சியே. அதனாலேயே மக்கள் என் மீது அன்பு கூர்ந்து முகம் மலர்ந்து என்னை வரவேற்கின்றனர். ஆனபோதிலும் இன்று அனைத்து தோட்டங்களுக்கும் பல்வேறு வேட்பாளர்கள் எமது மக்களை நாடி செல்கின்றனர்.

ஆனால் மக்கள் அவர்களை வரவேற்பதற்கு பதிலாக வாகனங்களில் இருந்து இறங்க விடாது அப்படியே திரும்பிச் செல்லுமாறு அனுப்பி வைக்கின்றனர். நம்பி வாக்களித்தோமே. மீண்டும் வாக்கு கேட்க வரும் நீங்கள் எமக்கு என்ன செய்தீர்கள் என்று கேள்வியெழுப்புகின்றனர்.

எமது மக்களின் இத்தகைய செயற்பாடானது என் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் எனக்கான ஆதரவையும் அதிகரித்திருக்கின்றது என்பதை உணர்த்தி நிற்கிறது.

மக்களின் ஆதரவை பெறுவதோ அல்லது அவர்களின் மனங்களில் இடம்பிடிப்பதோ இலகுவான காரியம் அல்ல. அது மிகவும் கடினமானது. அப்படியானால் கடினமான செயற்பாடுகளை முன்னெடுத்து மக்களின் விருப்பங்களை அறிந்து செயற்பட்டதால் இன்று அவர்களிடத்தில் ஒருதனியான இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளேன் என்பதை பெருமையாக கூறிக் கொள்கிறேன்.

பாடசாலைகளாக இருக்கலாம் ஆலயங்களாக இருக்கலாம் ஏனைய நலன்புரி சேவைகளாக இருக்கலாம் அனைத்துவகையிலான சேவைகளிலும் எனது உயரிய பங்களிப்பு இருக்கிறது. அவ்வாறு நிறைவேற்றப்பட்ட சேவைகளின் பங்காளியாக காணப்படுகிறேன்.

நான் கல்வி இராஜாங்க அமைச்சராக பதவியில் இருந்த போது கல்வி அமைச்சிலே சுமார் 900 மில்லியன் ரூபா பெருமதியான 4,60,000 சீருடைப் பொதிகள் தேங்கிக் கிடந்தன. இவற்றை எமது பிள்ளைகளுக்கு கொண்டு சேர்த்தால் என்ன என்ற நோக்கத்தின் அடிப்படையில் மலையகத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற 863 பாடசாலைகளை சேர்ந்த இரண்டுலட்சத்து ஐயாயிரம் மாணவ சிறுவர்களுக்கு அதனை மேலதிகமாக பகிர்ந்தளிப்பதற்கு வழிவகை செய்திருந்தேன்.

இது ஒரு வரலாற்று நிகழ்வாகும் இவ்வாறு இனியும் இடம்பெறாது. அதற்கான சாத்தியமும் கிடையாது. இவ்வாறுதான் எனது சமூக உணர்வை நான் வெளிப்படுத்தி காட்டியிருக்கிறேன்.

பதுளை மாவட்டத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய படங்களுக்கான பட்டதாரி ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது. இந்த நிலைமையை உணர்ந்து நான் பதுளை மாவட்டத்தின் இரண்டு தேசிய பாடசாலைகளுக்கு அதாவது பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி மற்றும் பசறை தமிழ்த் தேசிய கல்லூரி ஆகியவற்றுக்கு 11 பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்திருந்தேன்.

எனினும் துரதிர்ஷ்ட சமமாக நான்கு பேரே இங்கு வருகை தந்தனர். ஏனையவர்கள் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் இங்கு வரவில்லை. எனினும் இதனை இவ்வாறே விட்டுவிட முடியாது. இங்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் அதற்கான கடமையும் பொறுப்பும் கடப்பாடும் எனக்கு இருக்கின்றது. அதனை நிச்சயம் நான் செய்வேன்.

இம்முறை நாடாளுமன்ற தேர்தல் களம் மிகவும் வித்தியாசமாக காணப்படுகிறது. பதுளை மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இங்கு பெரும்பான்மை வாக்காளர்கள் சுமார் ஆறு லட்சம் பேர் காணப்படுகின்றனர். அதேபோன்று சிறுபான்மை வேட்பாளர்களாக ஒரு லட்சம் பேரே உள்ளனர்.

ஆகவே இந்த ஒரு லட்சம் வாக்காளர்களே மேற்படி ஆறு இலட்சம் சிங்கள வாக்காளர்களுடன் முட்டி மோதி போட்டியிட வேண்டி இருக்கிறது. அப்படியானால் நூற்றுக்கணக்கான வேட்பாளர்கள் களமிறங்கி இருக்கின்ற இந்நிலையில் தமிழ் பிரதிநிதித்துவத்துக்கு கேள்வி ஒன்று எழுந்திருக்கிறது.

அது மாத்திரமன்றி ஒருவிதமான அச்சமும் எழுந்திருக்கின்றது இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமானால் எனது மக்கள் தீர்க்கமாக சிந்தித்து தமது வாக்குகளை மிகச் சரியான முறையில் பிரயோகிக்க வேண்டும். பதுளை மாவட்டத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தையேனும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற காரணத் தேவையின் தீர்மானம் மக்களிடத்திலேயே இருக்கிறது என மேலும் தெரிவித்தார்.(05)

# கொழும்பு வர்த்தக நகர அபிவிருத்திதிட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராய்வு



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் போர்ட் சிட்டி கொழும்பு பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சியோங் ஹொங்பெங் ஆகியோருக்கு இடையிலானசந்திப்பொன்றுதிங்கட்கிழமைஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

கொழும்பு வர்த்தக நகர அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும், எதிர்கால பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கான புதிய திட்டங்கள் குறித்தும் இந்த கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக போர்ட் சிட்டி கொழும்பு நிறுவனத்தால் மூன்று மில்லியன் ரூபா நன்கொடையும் வழங்கப்பட்டது.

போர்ட் சிட்டி கொழும்பு நிறுவனத்தின் உதவி முகாமைத்துவப் பணிப்பாளர் சியன் நன்னும் இந்த சந்திப்பில் இணைந்து கொண்டார். (05)

# சனல் 4 வீடியோவில் முக்கியமான அதிகாரி என கூறப்படுபவர் யார்?

## விசாரணையை கோருகின்றார் உதயகம்மன்பில



உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த சனல்4 வீடியோவில் மிக முக்கிய அதிகாரி என குறிப்பிடப்படும் நபர் யார் என்பது குறித்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சனல் 4இன் வீடியோ குறித்து விசாரணை செய்த விசேட குழுவின் அறிக்கையை செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டவேளை அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் நியமித்த ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி எஸ் ஐ இமாம் குழுவின் அறிக்கையை உதயகம்மன்பில வெளியிட்டுள்ளார்.

உதயகம்மன்பில மேலும் தெரிவித்துள்ளதாவது -

அந்த வீடியோவில் மிக முக்கிய அதிகாரி என குறிப்பிடப்படும் நபர் யார் என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமிக்குமாறு அரசாங்கத்திற்கு நான் சவால் விடுக்கின்றேன்.

சனல் 4இன் வீடியோவில் புலனாய்வு அதிகாரிகளையும் இராணுவத்தினரையும் குற்றம்சாட்டும் நபர் தான் அரசாங்கத்தின் உயர் அதிகாரி என்ற தோற்றத்தை உருவாக்குகின்றார், அந்த நபர் தற்போது அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கின்றார் - அரசாங்கம் தேசத்துரோகத்திற்காக அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார். (05)




காலைக்கதிர் Kalaikkathir

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உண்மையிலேயே இது அநுரவின் சறுக்கல்தான்

**அதிகாரம் மனங்களையும் மனிதர்களையும் மாற்றிவிடும் என்பது சரியாகத்தான் இருக்கின்றது. எதிர்க் கட்சியில் இருக்கும் வரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் என்று பயங்கரமாகக் குரல் கொடுத்து வந்த தேசிய மக்கள் சக்தியினர் இப்போது தேவையான திருத்தங்களுடன் அந்தச் சட்டத்தைத் தக்கவைக்கப் போகின்றனர் என்று கூறுவதை வேறு எப்படிச் சொல்ல முடியும்?**

**அறுகம்பேயில் வெளிநாட்டுச் சுற்றுலாவிகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று வெளியான புலனாய்வுத் தகவல்களைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட 4 பேர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே நீதிமன்றத்தில் நடவழக்கைகள் தொடரப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்தே இந்த விவகாரம் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் விரைவில் பழைய சட்டம் பயன்படுத்தப்படாது என்றே மனித உரிமை ஆர்வலர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அதற்கு எதிர்மாறாகவே விடயங்கள் நடந்தேறுகின்றன.**

**இதன் வெளிப்பாடாகவே "அநுரவின் ஆட்சி சறுக்குகின்றது" என்று தமிழ் அரசுக் கட்சிப் பேச்சாளர் சுமந்திரன் தனது 'எக்ஸ்' பக்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**தேசிய மக்கள் சக்தியும் தங்களுக்கு முன் இருந்த பல ஆளும்தரப்புக்கள் போலவே, மக்களுக்கு வாக்குறுதியளித்த மாற்றத்தை ஏற்படுத்த மாட்டார்கள் என்ற அச்சத்தை, அபாயத்தை, கவலையை இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்ட விவகாரம் ஏற்படுத்தியுள்ளது.**

**பயங்கரவாதத் தடைச் சட்டம் (ஊனவீபு) இலங்கையில் கடந்த 45 வருடங்களாக பரபரப்பாகப் பேசப்படும் ஒரு சட்டமாகும். தமிழ், முஸ்லிம் மக்களை மட்டுமல்ல ஜேவிபி உறுப்பினர்கள் போன்ற சிங்களவர்களையும் அடக்கி ஒடுக்குவதற்கு ஆட்சியாளர்களால் ஈவு இரக்கமற்று இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதப் போரைக் காரணம் காட்டி இலங்கை ஆளும் தரப்புக்கள் இந்தச் சட்டத்தை நியாயப்படுத்தி வந்ததுடன், அதை அகற்றவும் மறுத்து வந்தன.**

**2009இல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததில் இருந்து, இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கைகள் அதிகரித்து வந்தன. உள்ளூர் மற்றும் சர்வதேச அரசியல் மற்றும் உரிமை ஆர்வலர்கள் இந்தச் சட்டத்தை முற்றாக ஒழிக்கவேண்டும் என்று குரல்கொடுத்து வருகின்றனர். இந்தச் சட்டத்திற்கு மாற்றாக ஐரோப்பிய மற்றும் பிற நாடுகளில் பயங்கரவாதம் மற்றும் வன்முறை தீவிரவாதத்தை கட்டுப்படுத்தக் கொண்டு வரப்பட்டுள்ள சிறப்பு சட்டங்களைப் போன்ற சட்டங்களே இலங்கைக்கும் தேவை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைகூட பயங்கரவாதத் தடைச் சட்டம் நீங்கப்படவேண்டும் என்று இலங்கை தொடர்பான தனது 30/1 தீர்மானத்தில் வலியுறுத்தி–ள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் இந்தச் சட்டத்தை நீக்கும்படி அழுத்தம் கொடுத்து வந்திருக்கின்றது.**

**அரசுத் தலைவராகக் கோட்டாபய ராஜபக்ச இருந்தபோது பயங்கரவாத தடைச் சட்டத்தை மீளாய்வு செய்ய சில நடவழக்கைகளை எடுத்தது, ஆனால் அந்தச் சட்டத்தை முற்றாக நீக்க மறுத்தது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ளீவீபு) என்று புதிய வரைவு ஒன்றை முன்வைப்பதற்கு முயற்சித்தது. ஆனால் அதுவும்கூட கடைசியில் நிறைவேற்றப்படவில்லை. 2022 ஒகஸ்ட், அப்போதைய அளும்தரப்பு தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அறிவித்தது,**

**ஜே.வி.பி மற்றும் அதன் புதிய அவதாரமான தேசிய மக்கள் சக்தி என்பவை ஆளும் தரப்புக்களின் இந்த முயற்சிகளை எல்லாம் கடுமையாக எதிர்த்தன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திரும்பப்பெற வேண்டும் என்று மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்தன,**


**தேசிய மக்கள் சக்தியின் இன்றைய புதிய எழுச்சிக்கு அடிப்படையான 'அரகலய' போராட்டத்தில் ஈடுபட்டவர்களை, அதன் இயங்கு சக்தியாக இருந்தவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தபோது, இந்தச் சட்டத்தை முற்றாக ஒழிக்கவேண்டும் என்று ஜேவிபியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா மற்றும் தற்போதைய தலைமை அமைச்சர் (பிரதமர்) ஹரினி அமரசூரிய ஆகியோர் குரல் எழுப்பினர்.**

**ஆனால், இப்போது அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கப்போவதில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் அரசுத் தலைவர் செயலகப் சட்டப் பணிப்பாளர் விஜேபண்டார தெரிவித்துள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பிரச்சினையில்லை, அதனைப் பயன்படுத்தும் முறையில்தான் பிரச்சினை என்று அதற்கு அவர் ஒரு விளக்கம்வேறு வழங்கியுள்ளார். அதேநேரம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி 4 பேர் மீது நடவழக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்னர் வரை இருந்த தேசிய மக்கள் சக்தியின் நிலைபாட்டில் இருந்து அது விலகத் தொடங்கிவிட்டது என்பதையே குறிக்கின்றது.**

# இஸ்ரேலும் அநுர ஆடிய ஆபத்தான விளையாட்டும்

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

இஸ்ரேலிய பிரஜைகள் அண்மைக்காலமாக இலங்கைக்கு விஜயம் செய்ய ஆரம்பித்தது மட்டுமல்ல; அவர்கள் நாட்டில் பிரிட்டிஷ் காலனி நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகித்துள்ளனர். 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர், மற்ற தெற்காசிய நாடுகள் எச்சரிக்கையாக இருந்தபோதும், டி.எஸ்.சேனநாயக்காவின் அரசாங்கம்இஸ்ரேலுடன்உறவுகளைஏற்படுத்தத் தேர்ந்தெடுத்தது. சேனநாயக்காவின் நிர்வாகம் இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்களையும் கப்பல்களையும் வாங்கியது. இருப்பினும், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.யின் அடுத்தடுத்த அரசாங்கங்கள். பண்டாரநாயக்காவும்சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பாலஸ்தீன விடுதலை அமைப்பை (PLO) அங்கீகரித்து இஸ்ரேலில் இருந்து விலகினர்.




1977 இல், ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசாங்கம் இஸ்ரேலுடன் உறவுகளை மீண்டும் ஏற்படுத்தியது. வடக்கில் போரின் போது, நிர்வாகம் இஸ்ரேலிய இராணுவ நிபுணர்களிடம் ஆதரவைப் பெற்று இஸ்ரேலிய ஆயுதங்களை வாங்கியது. பாரிய மகாவலி அபிவிருத்திதிட்டத்திற்காக இஸ்ரேலின் உயர்மட்ட நிபுணர்களும் பட்டியலிடப்பட்டனர். ஜயவர்தன இஸ்ரேலுக்கு இலங்கையில் நலன்கள் பிரிவை நிறுவ அனுமதித்தார்.

பியகம சுதந்திர வர்த்தக வலய திறப்பு விழாவின் போது, அப்போதைய கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய உயர்ஸ்தானிகர் தீட்சித்தின் அருகில் அமர வைத்து இஸ்ரேலிய பிரதிநிதிகளை அழைத்தார். ஜயவர்தன,'எங்கள் புதிய நண்பர்களை தீட்சிதிற்கு அறிமுகப்படுத்துங்கள்' என்று ரணிலுக்கு பரிந்துரைத்தார். ரணில் இஸ்ரேலியர்களை தீட்சித்துக்கு அறிமுகப்படுத்தினார், அப்போது இந்தியா இஸ்ரேலை எதிர்த்ததால் அதிருப்தி அடைந்தார். ஜெயவர்த்தனாவின் அறிவுறுத்தலின்படி, இஸ்ரேலியர்களை ரணிலின் அறிமுகம் செய்தமை தன்னைச் சங்கடப்படுத்தியதாக தீட்சித் தனது The Colombo Assignment என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். இலங்கையில் இந்தியாவின் தலையீடு இந்த இராஜதந்திர உறவுகள் மூலம் நாட்டில் மொசாட்டின் தலையீடு குறித்த கவலைகளால் உந்தப்பட்டது.

1988 இல் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், மொசாட் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு பயிற்சி அளித்தது மட்டுமன்றி புலிகளுக்கு எதிர் நடவடிக்கைகளையும் வழங்கியதாக குற்றம் சுமத்தி, முன்னாள் மொசாட் முகவரான விக்டர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி, ஏமாற்று வழி என்ற புத்தகத்தை வெளியிட்டார். பிரசுரமானதும், பிரேமதாச ஒரு ஆணைக்குழுவை நிறுவினார்'வடுகொடபிட்டிய ஆணைக்குழு என அறியப்பட்டது'கூற்றுக்களை விசாரிப்பதற்காக.

ஜயவர்தனவின் நிர்வாகத்தின் போது, லலித் அத்துலத்முதலி இஸ்ரேலுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி, இஸ்ரேலிய பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். ஜெயவர்த்தனவின் வழிகாட்டுதலைப் பின்பற்றி, அவர் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இஸ்ரேலுடன் நெருக்கமாக ஈடுபட்டார். அதேபோன்று, காமினி திசாநாயக்க மகாவலி திட்டத்திற்காக இஸ்ரேலுடன் உறவுகளை வளர்த்துக் கொண்டார், இது மேலும் இராஜதந்திர உறவுகளை வளர்த்தது. ஜெயவர்த்தனவின் மகன் ரவி ஜெயவர்தன, மொசாட்டின் வழிகாட்டுதலுடன் சிறப்பு அதிரடிப் படையை (STF) நிறுவினார், இது ஜே.வி.பி கிளர்ச்சியை எதிர்த்துப் போராடுவதற்கு STF-க்கு கிளர்ச்சித் தந்திரோபாயங்களில் பயிற்சி அளித்தது.

ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, ஜனாதிபதி பிரேமதாச இஸ்ரேலிய நலன்கள் பிரிவை மூடிவிட்டு, இஸ்ரேலிய பிரஜைகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார். லலித் மற்றும் காமினி மூலம் மொசாட் தனது பதவி நீக்கத்தை திட்டமிட்டார் என்று பிரேமதாசா நம்பினார். பாராளுமன்றத்தில், அவர் மொசாட்டை வெளிப்படையாக விமர்சித்தார், 'நான் இஸ்ரேலிய நலன்கள் பிரிவை வெளியேற்றினேன். மொசாட் எனக்கு எதிராக எழும்புவதில் ஆச்சரியமில்லை. எங்களில் சிலர் இஸ்ரேலியப் பல்கலைக்கழகங்களில் படித்து, அங்கு கற்பிப்பதில் லாபம் ஈட்டியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.




பிரேமதாசவின் படுகொலைக்குப் பிறகு, சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் இஸ்ரேலுக்கு எதிரான ஒரு தளத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது, ஆனால் 2000 இல் இஸ்ரேலிய தூதரகத்தை திறந்து, நடந்துகொண்டிருக்கும் போருக்கு உதவி கோரியது. இலங்கை-பாலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச, தனது பதவிக்காலத்தில் இலங்கைத் தொழிலாளர்கள் இஸ்ரேலில் வேலைவாய்ப்பைப் பெற்றதோடு, போர்க்கால முயற்சிகளை வலுப்படுத்த இஸ்ரேலுடன் நெருக்கமாக ஈடுபட்டார்.

இஸ்ரேலுடன் கோத்தபய ராஜபக்சவின் நட்புறவுக்கு போர்க்கால கூட்டணி அடித்தளம் அமைத்தது. ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியாக, செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கைப் படைகளை அனுப்பியதன் மூலம் உறவுகளை மேலும் வலுப்படுத்தினார், இதற்காக இஸ்ரேல் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை வழங்கியது.

அனுரா ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விஜயத்தை கட்டுப்படுத்தும் இஸ்ரேலின் முடிவை எதிர்த்து சிலி ஐக்கிய நாடுகள் சபைக்கு (ஐ.நா.) ஒரு பிரேரணையை சமர்ப்பித்தது. இதற்கு பல நாடுகள் ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் இலங்கை ஆரம்பத்தில் அதனை ஆதரிக்கவில்லை. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கரின் விமர்சனத்தைத் தொடர்ந்து, இலங்கை பின்னர் ஆவணத்தில் கையொப்பமிட்டது, அநுரவின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள முரண்பாடுகளை எடுத்துக்காட்டுகிறது, இது

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இஸ்ரேலும் அநுர ஆடிய ஆபத்தான விளையாட்டும்

பொருளாதார நலன்களுடன் சிக்கியது, வெளியுறவுக் கொள்கையுடன் விளையாடுவது பொருளாதாரத்தை நேரடியாக பாதிக்கிறது.

இஸ்ரேலியர்கள்இலங்கைக்குவந்ததுஇன்றுநேற்றல்ல. பிரிட்டிஷ் காலனி ஆட்சிக் காலத்திலேயே இஸ்ரேலியர்கள் இலங்கையில் உயர் பதவிகளை வகித்தனர். 1948இல் சுதந்திரம்பெற்ற பிறகுதெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகள் இஸ்ரேலுடன் உறவுகளை ஆரம்பிப்பது பற்றி ஒன்றுக்கு இரண்டுமுறையோசித்துக்கொண்டிருந்தபோது டி.எஸ்.சேனநாயக்கவின் ஆளும்தரப்பு இஸ்ரேலுடன் உறவை ஆரம்பிக்கத் தீர்மானித்தது.

சேனநாயக்க ஆட்சிபீடம் இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்களை வாங்கியது. கப்பல்களை வாங்கியது. சேனநாயக்கவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சியும் சிறீமாவோவின் ஆட்சியும் பாலஸ்தீன விடுதலை அமைப்பை ஏற்றுக்கொண்டு இஸ்ரேலுடனான உறவுகளைத் துறந்தன. 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெவர்த்தன ஆட்சி மீண்டும் இஸ்ரேலுடன் உறவுகளை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

வடக்கில் போர் தொடங்கிய பின்னர், ஜே.ஆரின் ஆளும்தரப்புக்கு இஸ்ரேலிய இராணுவ வல்லுநர்கள் மற்றும்இஸ்ரேலியஆயுதங்களின்உதவிதேவைப்பட்டது. அத்துடன், பிரமாண்டமான மகாவலித் திட்டத்தைத் தொடங்குவதற்கு அக்காலகட்டத்தில் உலகில் முதலிடம் வகிக்கும் நிர்மான நிபுணர்களாக இருந்த இஸ்ரேலிய வல்லுநர்கள் தேவைப்பட்டனர். இதன் விளைவாக, ஜே.ஆரின் ஆட்சி இஸ்ரேலின் நலன் காக்கும் பிரிவை இலங்கையில் தொடங்க அனுமதி வழங்கினார்.

பியகம சுதந்திர வர்த்தக வலயம் திறக்கப்பட்டபோது, அந்த விழாவிற்கு இஸ்ரேலியப் பிரதிநிதிகளையும் அப்போதைய கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைத்திருந்தார். அப்போதைய இந்திய உயர்ஆணையர் டிக்சிற்றுக்கு அருகிலேயே இஸ்ரேலியர்களுக்கு இருக்கைகள் போடப்பட்டன. ”எங்கள் புதிய நண்பர்களை டிக்சிற்றுககு அறிமுகப்படுத்துங்கள்...” என்று ஜே.ஆர். ஜெயவர்த்தன ரணிலிடம் கூறினார்.

ரணில் இஸ்ரேலிய தூதுக்குழுவை டிக்ஸிற்றிற்கு அறிமுகப்படுத்தினார். அதைக் கேட்டு டிக்ஸிற்றின் முகம் கறுப்பாக மாறியது. அப்போது இந்தியா இஸ்ரேலுக்கு எதிரான நாடாக இருந்தது. ஜே.ஆரின் ஆலோசனையின் பேரில் ரணில் இஸ்ரேலிய பிரதிநிதிகளை இந்நிகழ்வுக்கு வரவழைத்து தமக்கு அறிமுகம் செய்து தன்னை சங்கடப்படுத்தியதாக டிக்ஸிற் எழுதிய ‘கொழும்பு பாத்திரம்’ நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இலங்கை-, இஸ்ரேல் உறவின் ஊடாக இலங்கையில் உளவு பார்க்கத் தொடங்கிய இஸ்ரேலின் உளவுப் படையான மொசாட்டை சகித்துக் கொள்ள முடியாமல் போனதே இலங்கையில் இந்தியா தலையிட முக்கிய காரணம்.



1988இல் பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், முன்னாள் மொசாட் புலனாய்வு அதிகாரியான விக்டர் ஒஸ்ஃப்ரெஸ்கி, ’ஏமாற்று வழி மூலம்’ (பை வே ஒஃவ் டிசெப்ஷன் - By Way of Deception) என்ற புத்தகத்தை எழுதினார். மொசாட் புலனாய்வுப் பிரிவினர் இலங்கைப் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு இஸ்ரேலில் பயிற்சியளித்துக் கொண்டிருந்தபோது, மறுபக்கம் விடுதலைப் புலிகளுக்கும் இஸ்ரேல் பயிற்சி வழங்கியது என்று அவர் எழுதியிருந்தார். போர் நடத்துவதற்கு இலங்கை ராணுவத்துக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டபோது, அந்த ஆயுதங்களுக்கு எப்படி எதிர்வினையாற்றுவது என்பது புலிகளுக்குச் சொல்லிக்கொடுக்கப்பட்டது என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தநூல்வெளிவந்தபின்னர், அதில்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையா இல்லையா என்பதை ஆராய பிரேமதாச ஒரு ஆணைக்குழுவை நியமித்தார். அந்த ஆணைக்குழுவுக்கு வடகுடாபிட்டிய ஆணைக்குழு என்று பெயரிடப்பட்டது.

இலங்கையில் ஜே.ஆரின் ஆட்சியின்போது லலித் அத்தலத்முதலி இஸ்ரேலுடன் நெருங்கிய உறவைப் பேணி வந்தார். அவர் இஸ்ரேலிய பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் இருந்தார். தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும்இருந்தஅவர், இஸ்ரேலுடன்நெருக்கமான உறவைக் கையாண்டார். மற்றொரு பக்கத்தில் ஜே.ஆரின் ஆலோசனையின் பேரில் காமினி இஸ்ரேலை மகாவலி அபிவிருத்தியில் ஈடுபடுத்தியது போல் இஸ்ரேலும் காமினியுடன் உறவுகளை வளர்த்துக்கொண்டது.

ஜே.ஆரின் மகன் ரவி ஜயவர்தன இஸ்ரேலிய உளவுத்துறையான மொசாட்டின் ஆலோசனையின் பேரில் சிறப்பு அதிரடிப்படையை உருவாக்கினார். ஜே.வி.பியினரின் பயங்கரவாதத்தை அடக்குவதற்காகவே எஸ்.டி.எஃப். உருவாக்கப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஜே.ஆர். மற்றும் பிரேமதாச ஆட்சிகளில் இலங்கைப் பொலிஸாரின் சிறப்புப் படைகள் இஸ்ரேலிடம் இருந்து முழுப் பயிற்சியைப் பெற்றன.

இதற்கிடையில், இலங்கையில் இஸ்ரேலிய மொசாட் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானது. இலங்கையில் உள்ள இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை மூட பிரேமதாச தீர்மானித்தார். இஸ்ரேலியர்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டது.

அதன் பின்னரே பிரேமதாசாவை அரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கான நாடாளுமன்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. . லலித் மற்றும் காமினியை பயன்படுத்திஇஸ்ரேலியஉளவுஅமைப்பானமொசாட்தான் இதற்கு முயன்றது என்று பிரேமதாசா நினைத்தார். அந்தப் பதவி நீக்க முயற்சிக்குப் பின்னர் பிரேமதாச நாடாளுமன்றத்திற்கு வந்து மொசாட் உளவுத்துறையை நேரடியாகக் குற்றஞ்சாட்டினார்.

”நான் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை நாட்டை விட்டு வெளியேற்றினேன். அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. மொசாட் எனக்கு எதிராகத் திரும்பியதிலும் ஆச்சரியமில்லை. இஸ்ரேலுக்குச் சென்று, அங்குள்ள பல்கலைக்கழகங்களில் படித்து, அங்குள்ள பல்கலைக்

தொடர்ச்சி 6ம் பக்கம்...........



காலைக்கதிர் Kalaikkathir

# இஸ்ரேலும் அநுர ஆடிய ஆபத்தான விளையாட்டும்



கழகங்களில் பாடம் நடத்தி, அசுத்தமாகப் பணம் சம்பாதித்தவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்...” என்று பிரேமதாச தனது உரையில் தெரிவித்தார்.

இதன் பின்னர் பிரேமதாசா கொல்லப்பட்டார். அவருக்குப்பின்னர்ஆட்சிஅதிகாரத்தைக்கைப்பற்றிய சந்திரிகா குமாரணதுங்க, இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாட்டோடு ஆட்சியைப் பிடித்தபோதும், 2000ஆம் ஆண்டு இலங்கையில் இஸ்ரேலிய தூதரகத்தை நிறுவுவதற்கு அனுமதித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு அவர் நடத்திய போரில் இஸ்ரேலின் உதவியைப் பெறுவதற்காக இஸ்ரேலியத் தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டது.

2005ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இலங்கை-பாலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் தலைவர் மஹிந்த ராஜபக்சவும் போரில் உதவி பெற இஸ்ரேலுடன் நெருக்கமான உறவையே வைத்திருந்தார். இக்காலத்தில்தான் இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் வேலை வாய்ப்பு கிடைத்தது.

போரின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட உறவுகளினால் கோட்டாபய இஸ்ரேலின் நண்பரானார். அவர் விரட்டியடிக்கப்பட்டதும் ரணில் அதிபராகி, செங்கடலில் ஈரானின் ஹூதி கிளர்ச்சியாளர்களை தாக்க இலங்கைப் படையினரை அனுப்பி இஸ்ரேலுடனான உறவை அதிகப்படுத்தினார். பதிலுக்கு இஸ்ரேல் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரித்தது.

அநுரா அதிபரான பிறகு ஐ.நா. பொதுச்செயலாளர் இஸ்ரேலுக்கு வர தடை விதித்த இஸ்ரேலின் முடிவுக்கு எதிராக சிலி ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டு வந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் இதில் கையெழுத்திட்டன. அதில் இலங்கை கையெழுத்திடவில்லை. சமகி ஜன பலவேகயவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மார்க்கார் இது தொடர்பில் பகிரங்கமாகக் கேள்வி எழுப்பினார். அதன்பின், இலங்கை அந்த கடிதத்தை மீண்டும் கொண்டு வந்து தனது சம்மதக் கையெழுத்தை வைத்தது.

அநுரவின் ஆளும்தரப்பு வெளிவிவகாரக் கொள்கை தெளிவாக இல்லை என்பதையே இந்தச் சம்பவம் காட்டுகிறது. வெளியுறவுக் கொள்கையும் பொருளாதாரமும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. வெளியுறவுக் கொள்கையுடன் விளையாடுவது பொருளாதாரத்துடன் விளையாடும் ஆபத்தான விளையாட்டு.






# தடைசெய்யப்பட்ட மோ.சைக்கிள்களுடன் தொட்டுவாவவில் இளைஞர்கள் கைது

வீதிகளில் பயன்படுத்துவதற்குத் தடை செய்யப்பட்ட அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களுடன் ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தொட்டுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில - சிலாபம் வீதியில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அதிக வேகத்துடன் மோட்டார் சைக்கிள்கள் சில பயணிப்பதாக தொட்டுவாவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதம்பே, நாத்தாண்டிய மற்றும் கிரிமெட்டியான ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 முதல் 20 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தொட்டுவாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கரையோர மார்க்கத்தில் தொடருந்து சேவை பாதிப்பு

தெற்கு பயாகல தொடருந்து நிலையத்தில் தொடருந்து ஒன்றில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கரையோர ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளன என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.(05)

# யாழ் – கொழும்பு தொடருந்து சேவைகள் மீண்டும் ஆரம்பம்



கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கான நேரடி ரயில் சேவைகள் சுமார் 10 மாதங்களுக்கு பின்னர் மீண்டும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து திங்கட்கிழமை காலை 05.45 மணிக்கு புறப்பட்ட ரயில் மதியம் 01.10 மணியளவில் யாழ்ப்பாண ரயில் நிலையத்தை சென்றடைந்தது.

யாழ்ப்பாணம்-கொழும்புக்கு இடையிலான ரயில் சேவைகள் உள்நாட்டு யுத்தம் காரணமாக வவுனியாவுடன் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் மீண்டும் 2014ஆம் ஆண்டு முதல் கொழும்பு - யாழ்ப்பாண சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த 2023 ஆம் ஆண்டு வவுனியாவிற்கும் அனுராதபுரத்திற்கும் இடைப்பட்ட ரயில் பாதை புனரமைப்பு பணிகளுக்காக கொழும்பில் இருந்து புறப்பட்ட ரயில் அனுராதபுரத்துடனும் , யாழில் இருந்து புறப்படும் ரயில் வவுனியாவுடனும் சேவையை மட்டுப்படுத்தின.

புனரமைப்பு பணிகளின் முடிவடைந்து பின்னர் மீண்டும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் அனுராதபுரம் மற்றும் மாகோ இடையிலான ரயில் பாதை புனரமைப்பு பணிக்காக கொழும்பில் இருந்து புறப்பட்ட ரயில் மகோவுடனும் , யாழில் இருந்து புறப்படும் ரயில் அநுராதபுரத்துடனும் தமது சேவையை மட்டுப்படுத்தின.

அநுராதபுரம் - மாகோ ரயில் பாதை புனரமைப்பு பணிகள் முடிவடைந்து கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், கொழும்பு - யாழ்ப்பாண ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுத்த போதிலும் , ரயில் சமிக்ஞை விளக்குகள் சீர்திருத்த பணிகள் உள்ளிட்ட தொழிநுட்ப ரீதியான வேலைகள் பூர்த்தியாகவில்லை என சேவை ஆரம்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் திங்கட்கிழமை முதல் கொழும்பு கோட்டை - யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கு இடையிலான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (05)

# காட்டு யானை தாக்கி மூதாட்டி உயிரிழப்பு

அனுராதபுரம், மகாவிலாச்சி பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மகாவிலாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரம், மகாவிலாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மூதாட்டி தனது வீட்டுத் தோட்டத்திற்கு வந்த காட்டு யானையைத் துரத்த முயன்ற போது காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்; எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# மத ஸ்தலங்களுக்கான சூரிய கல மின்சக்தி தொகுதிகள் கையளிப்பு




கூரைகளில் பொருத்தப்படும் சூரியக்கல மின் தொகுதிகளை கையளிக்கும் நிகழ்வு மேல் மாகாணத்தில் உள்ள கோகந்தர விகாரை, ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம், புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் முகத்துவாரம் ஜும்மா பள்ளிவாசல் ஆகிய நான்கு மத ஸ்தலங்களில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது.

இந்த கையளிப்பு நிகழ்வுகளில் இந்திய உயர் ஸ்தானிகராலயம், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை நிலை பேண்தகு சக்தி அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கையில் உள்ள 5000 மத ஸ்தலங்களில் கூரையில் பொருத்தக்கூடிய சூரிய கலத் தொகுதிகளை அமைப்பதனை இலக்காகக் கொண்டு இந்தியாவால் ஒதுக்கப்பட்ட 17 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் பசுமை சக்தி பாவனையினை அதிகரித்தல் மற்றும் இத்தலங்களின் மின்சக்தி செலவீனத்தை குறைத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



பௌத்தம், இந்து சமயம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய நான்கு மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரிய மதஸ்தலங்களை உள்ளடக்கியதாக இலங்கையின் 9 மாகாணங்களிலும் உள்ள 25 மாவட்டங்களிலும் இந்த 5000 சூரிய கல மின் தொகுதிகள் அமைக்கப்படும்.

இந்தியா, இலங்கையுடன் கொண்டுள்ள அபிவிருத்தி பங்குடைமைக்கு வலுசேர்க்கும் மனிதர்களை மையமாகக் கொண்டதும் மதச் சார்பற்றதுமான பெறுமானங்களை வலியுறுத்தும் வகையில் புதுப்பிக்கத்தக்க சக்தி துறையில் காணப்படும் இருதரப்பு ஒத்துழைப்புக்கான இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பினை இந்த திட்டம் சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் மக்களை மையமாகக் கொண்ட மின்சக்தி மாற்றக் கொள்கைக்கு ஆதரவாக, இந்தியாவின் அனுபவத்துடன் முன்னெடுக்கப்படும் இந்த திட்டமானது வருடாந்தம் 37 மில்லியன் அலகுகள் மின்சாரத்தினை உற்பத்திசெய்து சூரியசக்தி மின்சக்தி கொள்ளளவில் 25 மெகா வாட்டினை சேர்க்கவுள்ளது.

இந்த திட்டம் அடுத்த வருட முற்பகுதியில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தொகுதியின் விநியோகம் மற்றும் பொருத்துதல் ஆகியவற்றுக்கு மேலதிகமாக நீண்டகால வினைத்திறன் மிக்க செயற்பாடு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் நோக்குடன் 5 வருடகாலத்துக்கான பராமரிப்பினையும் இந்த திட்டம் உள்ளடக்கியுள்ளது.

அண்மையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தபோது இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் கீழ் இலங்கையின் முன்னுரிமைக்குரிய இருதரப்பு திட்டங்களை முன்னேற்றுவதற்கான வலுவான அர்ப்பணிப்பினை இந்தியா வலியுறுத்தியிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளத்தக்கது.

இவ்வாறான முயற்சிகளின் முக்கிய பகுதியான இத்திட்டம் இருநாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பினை ஊக்குவிக்கிறது.

நம்பகமான, செலவு குறைந்த மற்றும் நிலைபேண்தகு சக்தியினை ஊக்குவிக்கும் பொதுவான இலக்கினை வலியுறுத்தி இந்தியா இலங்கை இடையிலான சக்தி பங்குடைமையில் ஒரு புதிய அத்தியாயத்தினை இந்த திட்டம் ஆரம்பித்து வைக்கிறது.



இவ்வாறான நிலையில் இத்துறைசார்ந்து தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஒத்துழைப்பு திட்டங்களில் 10 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையின் கீழ் இலங்கை முழுவதிலும் உள்ள பிரிவேனாக்கள் மற்றும் 9000 பௌத்த விகாரைகளுக்கு சூரியக் கல மின்தொகுதி அமைத்தல், யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் முன்னெடுக்கப்படும் கலப்பு முறை புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம், எல்.என்.ஜி விநியோகம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சம்பூரில் சூரிய கல மின்சக்தி ஆலையினை அமைத்தல் ஆகியவை உள்ளடங்குகின்றன. (05)

# அறுகம்குடா ஆபத்து குறித்து தகவல்களை வழங்கினோம்

## இலங்கை அரசு துரிதமாக செயற்பட்டது அமெரிக்கா பயண தடைவிதிக்கவில்லை

### ஜூலி சங் பாராட்டு

இலங்கையர்களினதும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்பவர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்து இணைந்து செயற்படுகின்றது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.



விசேட அறிக்கையொன்றில் அவர் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தல்களிற்கு தீர்வை காண்பதில் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்து நான் பெருமிதம் கொள்கின்றேன்.அமெரிக்கா இலங்கை குறித்து போக்குவரத்து தடை எதனையும் நடைமுறைப்படுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்

இலங்கையில் உள்ள அனைத்து அமெரிக்கர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய தனது கடமையை வலியுறுத்தியுள்ள அவர், நம்பகதன்மை மிக்;க பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து தூதரக பணியாளர்கள்,அமெரிக்க பிரஜைகள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவும் நாடு ஆகிய தரப்புடன் தகவல்களை பகிர்ந்துகொள்ளவேண்டும் எச்சரிக்கும் கடமை கொள்கை குறித்த ஆணைபற்றியும் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் எங்கள் தூதரகங்கள் எச்சரிப்பதற்கான கடமை என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுகின்றன,அதாவது நம்பகதன்மை குறித்த எச்சரிக்கை கிடைத்தால் நாங்கள் எங்கள் பிரஜைகள் மற்றும் அந்த நாட்டின் அதிகாரிகளுடன் அந்த தகவலை பகிர்ந்துகொள்ளவேண்டும். இது அமெரிக்கா பின்பற்றும் உலகளாவிய நடவடிக்கை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அறுகம் குடாவில் பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்பட்டதும் நாங்கள் அது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு அறிவித்தோம், இலங்கை அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்தது என ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

நாளாந்த அடிப்படையில் நாங்கள் அவர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றோம், இலங்கையின் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனான கூட்டாண்மை குறித்து நாங்கள் பெருமிதம் அடைகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு மற்றும் வெளிப்படைதன்மை குறித்த இலங்கை அரசாங்கத்தினதும் பாதுகாப்பு அதிகாரினதும் அர்ப்பணிப்பு குறிப்பிட்டு சொல்லப்படவேண்டிய விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மறுஅறிவித்தல் வரும் வரை அறுகம்குடாவிற்கு செல்லவேண்டாம் என அமெரிக்கர்களிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியான பாதுகாப்பு மற்றும் ஸ்திரதன்மையின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். (05)

# களுத்துறையில் 12 பேரை ஓட்டோவில் ஏற்றிய சாரதி பொலிஸிடம் சிக்கினார்

களுத்துறை, பேருவளை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட 12 பேரை ஓட்டோவில் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பேருவளை பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் தெரிவித்தனர்.

பேருவளைபொலிஸ்போக்குவரத்துபிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தீனகொட பிரதேசத்தில் வசிக்கும் ஓட்டோ சாரதி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 11 பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியை ஒருவரைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக ஓட்டோவில ஏற்றிச்சென்றுகொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# ஓய்வுபெற்ற பெண் பொலிஸ் அதிகாரியிடம் வழிப்பறியாம்

## விமானப் படை முன்னாள் சிப்பாய் கைது

ஹோமாகம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஓய்வு பெற்ற பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரை தாக்கி நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றதாக கூறப்படும் முன்னாள் விமானப் படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கொட்டாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் பாதுக்க – அங்கம்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய முன்னாள் விமானப் படை சிப்பாய் ஆவார்.

சந்தேக நபர் கடந்த 15 ஆம் திகதி அன்று ஹோமாகம பிரதேசத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ள நிலையில் அதே பகுதியில் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஓய்வு பெற்ற பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரை தாக்கி மூன்று பவுண் பெறுமதியுடைய நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் பாதுக்க அங்கம்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பல்வேறு பிரதேசங்களில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கொள்ளை சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகக்கூறப்படும் மோட்டார்சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

## பிராந்தியக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைமையில் உள்வாங்கப்பட்டுள்ள 'பிராந்தியங்களுக்கிடையிலான கூட்டு' இன் கீழான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை மற்றும் இந்தோனேசியாவும் இணைந்து விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தார்:

ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய சங்கத்திலிருந்து விலகிய பின்னர், ஐரோப்பிய சங்கத்தின் பொது விருப்பு முறையின் கீழ் வழங்கப்பட்டுள்ள வர்த்தக விருப்புக்களை பேணிச் செல்வதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான உத்தேச வர்த்தக முறை 2023 யூன் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கை ஐரோப்பிய சங்கத்தின் பொது விருப்பு முறையின் கீழ் பயனாளியாகவுள்ளமையால், ஐக்கிய இராச்சியத்தின் உத்தேச வர்த்தக முறையின் பயனாளியாகவும் இருக்கிறது. குறித்த உத்தேச முறையின்கீழான அளவுகோல்களின்பிரகாரம் குறித்த விருப்பு முறையிலான நன்மைகளை இலங்கையின் ஆடைக் கைத்தொழில் உற்பத்திகளுக்காகப் பெற்றுக் கொள்வதாயின் உள்நாட்டில் பின்னப்பட்ட துணிகளை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி தைத்த ஆடைகளை உற்பத்திசெய்யவேண்டியுள்ளது.

ஆனாலும், உள்நாட்டில் பின்னப்பட்ட துணி உற்பத்திகள் போதியளவு இன்மையால், ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தக உத்தேச முறையில் விருப்பு நன்மைகளை உயரிய அளவில் பெற்றுக் கொள்வது எமது நாட்டின் ஆடைக்கைத்தொழில்உற்பத்தியாளர்களுக்குச் சாத்தியமற்றுப் போயுள்ளது.

அதேநேரம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வர்த்தக உத்தேச முறையின்அளவுகோல்களுக்கமைய,விருப்பு நன்மைகள் உரித்தான ஒரு பிராந்தியத்தின் குழுவின்நாடொன்றில்உற்பத்திசெய்யப்படும் உள்ளீடுகள்/பொருட்கள் அவ்வாறானதொரு விருப்பு நன்மைகளுக்கு உரித்தான வேறொரு பிராந்தியத்திக் குழுவிலுள்ள நாடொன்றால்உற்பத்திசெய்யப்படும்நாட்டின் முடிவுப்பொருளாகக்கருத்தில்கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

குறித்த அளவுகோல்கள் பிராந்தியங்களுக்கிடையில் அறிமுகப்படுத்தப்படுவதுடன், அதன் மூலம் குறித்த இரு நாடுகளின் ஏற்றுமதியாளர்களுக்கு நன்மைகள் உரித்தாவுதற்கான இயலுமை உண்டு. குறித்த ஏற்பாடுகளுக்கமைய, ஆசிய பிராந்தியத்தில் (பிராந்திய குழு 1) மற்றும் சார்க் வலயம் (பிராந்திய வலயம் ஐஐ) போன்ற இரண்டு வலயங்களிலும் மேற்குறிப்பிட்ட விருப்பு நன்மைகள் உரித்தான இரண்டு வலயங்களாகும்.

அதற்கிணங்க, இலங்கை மற்றும் இந்தோனேசியாவுக்கும் ஒருங்கிணைந்த பிராந்தியங்களுக்கிடையிலான கூட்டு தொடர்பாகத் தேவையான துணி/மூலப் பொருட்களை இந்தோனேசியாவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும், இலங்கையின் தைத்த ஆடைகளை ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் விருப்பு நன்மைகளை இரண்டு நாடுகளுக்கும் அடைந்து கொள்வதற்காக வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழிற்றுறை மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## ஊவா தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்படவுள்ள நிலையில், தீபாவளி தினத்துக்கு மறுநாள் தமிழ் மாணவர்களுக்கு பாடசாலைக்கு வருவதில் சிரமம் என்பதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஊவா மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் ஊவா மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, நவம்பர் முதலாம் திகதி தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதாகவும், அன்றைய கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 09.11.2024 அன்று நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஞ்சனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு தொலைக்காட்சிகளில் ஒளிப் பரப்பான செய்திகளும், தேசிய பத்திரிகையில் வெளியான செய்திகளின் தகவல்களும் போதுமானவையாக உள்ளன. ஆகவே தேர்தல்கள் திணைக்களம் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நிதி ஒதுக்கப்படவில்லை என எதற்காக அரசு பொய் கூறுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என பிரதமர்தெரிவித்துள்ளார். ஆனால்தேர்தலுக்கு முன் 6 மாதங்களுக் ஒருமுறை சம்பளத்தை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர்கள் கூறினர். 13 சதவீதம் தேசிய உற்பத்திக்கு சமாந்தர செலவு வரையறையின் கீழ் 3 நபர்கள் கையெழுத்திட்ட நிதி அமைச்சின் அறிக்கையையே கடந்த அமைச்சரவை சம்பளஅதிகரிப்புதொடர்பானதீர்மானத்துக்காக பயன்படுத்திக் கொண்டது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்துக்கூடாக கட்டம் கட்டமாக சம்பள அதிகரிப்பை வழங்க முடியும். எனவே திறைசேரியில் இதற்காக நிதி ஒதுக்கப்படவில்லை எனக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. எதற்காக நிதி ஒதுக்கப்படவில்லை என ஆளும்தரப்புக் கூறுகிறது? இந்த ஆளும்தரப்பு மக்களிடம் கூறும் அனைத்தும் உண்மையா என்ற பிரச்சினையும் ஏற்படுகிறது.

இன்று சதொசவில் விற்பனை செய்வதற்கு அரிசி இல்லை. இதற்கு முன்னர் அரிசியை இறக்குமதி செய்யப் போவதில்லை என்று ஆளும்தரப்புக்குறிப்பிட்டிருந்தாலும்,எதிர்வரும் நாட்களில் இந்தியாவிலிருந்து 50 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதாக அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அரிசி பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகின்ற போதிலும், அதனைத்தீர்ப்பதற்கான இயலுமை ஆளும்தரப்புக்கு இல்லை. எனவே மீண்டும் அரிசியை இறக்குமதினனன செய்யும் நிலைமைக்குஆளும்தரப்புத்தள்ளப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் அரிசி பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. தேர்தலுக்கு முன்னர் நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டில் திருத்தங்களை மேற்கொள்வதாகக் கூறினர். செய்ய முடியாதவற்றைக் கூற வேண்டாமென அன்றே நாம் எச்சரித்தோம். ஆனால் இன்று கூறிய எதையுமே செயற்படுத்த முடியாமல் ஆளும்தரப்புத் தடுமாறிக் கொண்டிருக்கிறது என்றார்.

## உண்மையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருணத்திற்காகத்தான் இத்தனை நாளாகக் காத்திருந்தோம். எமது கொள்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடியநாடாளுமன்றத்தை உருவாக்குங்கள். இன்றைய நிலையில் இந்த நாட்டில் மாற்றத்திற்கான பணியை ஆரம்பித்துள்ளோம். நாங்கள் கவலைப்படவில்லை. இப்பொழுதெல்லாம் சிலர் பதட்டப்பட்டு விதவிதமாகச் சொல்வதைக் காணலாம்.

75 ஆண்டுகளாக அமைதியாக இருந்த ஒரு கூட்டம் சலசலக்க ஆரம்பித்துள்ளது. ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஒரு வார்த்தை கூட பேசாதவர்கள், தகவல் அறிந்து அதை மூடி மறைத்துவிட்டு, தற்போது விசாரணை குறித்து எங்களிடம் கேள்வி கேட்கின்றனர். அல்லது பொருட்களின் விலையேற்றம், ஏன் திருடர்கள் பிடிபடவில்லை என பலவிதமான கதைகளை கூறி பல்வேறு பிரச்சினைகளை கிளப்ப ஆரம்பித்துள்ளனர்.

பரவாயில்லை, அவர்களுக்கு வேறு எதுவும்செய்ய முடியாது என்பது எங்களுக்குத் தெரியும்.

நாங்கள்கவலைப்படவில்லை, படிப்படியாக இந்த நாட்டை ஒரு திட்டத்துடன் மாற்றி வருகிறோம். அதற்கு நிறைவேற்று அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது நாடாளுமன்ற அதிகாரமும் வேண்டும் என பிரதமர் கூறினார்.

## மாற்றத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றாலும்பொருட்களின்விலைஅதிகரிப்பைச் சுட்டிக்காட்டியே ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள்ஜனாதிபதிக்குஎதிராகக்குற்றச்சாட்டு தெரிவித்து வந்தார்கள்.

ஆனால் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி பதவிக்கு வந்து ஒரு மாதம் கடந்தும் அத்தியாவசிய எந்த பொருட்களின் விலையும் குறையவில்லை. என்றாலும் மக்கள் அதிகம் பயன்கடுத்தும் பருப்பு, நெத்தலி, டின் மீன் போன்ற போன்ற பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று அரச ஊழியர்களின் சம்பத்தை அதிகரிப்பதற்கு ரணில் விக்ரமசிங்கவின் ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டது. அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் அதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. என்றாலும் அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் பரப்புரைகளின்போது, அரச ஊழிர்களிக் சம்பன அதிகரிப்பை 6 மாதங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்வதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் அமைச்சர் விஜித் ஹேரத் அதனை தற்போது மறுத்து வருகிறார்.

அதேநேரம் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் வரவு செலவு திட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என தற்போது ஜனாதிபதியும் தெரிவித்து வருகிறார். இது அவர்களின் ஏமாற்று நடவடிக்கையாகும்.

ரணில் விக்ரமசிங்க கடந்த ஆட்சியில் மக்கள் விரும்பும் தீர்மானங்களை எடுத்ததில்லை. பதிலாக, அவரால் செய்ய முடியுமான விடயங்களை மட்டுமே மக்களுக்கு அறிவிப்பார். அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்திலும் ரணில் விக்ரமசிங்க அவசரப்பட்டு அறிவிக்கவில்லை. மாறாக அது தொடர்பாக ஆராயக் குழு ஒன்றை நியமித்து, அந்த குழுவின் பரிந்துரைக்கமையவே நடவடிக்கை எடுத்திருந்தார் - என்றார்.

## நாயைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் வசிக்கும் 55 வயது ஓய்வுபெற்ற இராணுவ கப்டன். நாயின் உரிமையாளர்கள் செய்த முறைப்பாட்டின்படி அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நாய், சந்தேக நபரின் வீட்டின் முன் சாலையில் குருதிச் சகதியில் கிடந்தது. இரவு நேரங்களில் வீட்டின் முன் உள்ள சாலையில் அடிக்கடி வந்துநின்று குரைத்ததால் தூக்கம் கலைகிறது என்று கோபமடைந்த சந்தேகநபர், நாயைச் சுட்டுக்கொன்றார் என்று விசாரணையில் தெரியவந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கந்தானை பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய கட்டளை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் சமன் லியனகே தலைமையிலான குழுவினர் விசாரித்து வருகின்றனர்.

## ஆசிரிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார்.

ஆசிரிய ஆலோசகர்களின் சம்பளங்களில் நிலவும் முரண்பாடுகளை நீக்குமாறு கோரி, அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர்கள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ப்ரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்தரப்பில்முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி நுவன் போப்பகே, ஆசிரிய ஆலோசகர்களின் சம்பளம், ஆசிரியர்களின் சம்பளத்தைவிட மிகக்குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் இதன் காரணமாக தமது சேவைபெறுநருக்கு பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும் மன்றில் சுட்டிக்காட்டினார்.

ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளங்களுக்கிடையே சில முரண்பாடுகள் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் அந்த முரண்பாடுகளை நிவர்த்திசெய்து சம்பளத்தை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் யுரேஷா டி சில்வா தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் மனுதாரர் தரப்பினர் இணக்கம் தெரிவித்ததுடன், அதன் பின்னர் குறித்த மனு தொடர்பான விடயங்களைமுடிவுறுத்தவும்உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. மனுவின் பிரதிவாதிகளாக கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சிலர் பெயரிடப்பட்டிருந்தனர்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்கொழும்பு வெள்ளவீதியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் கட்சியின் தலைவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய முன்னர் ஜே.வி.பி.யுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டும், ஊதிய முரண்பாடுகளை களையவேண்டும், சம்பளத்தை கஉயர்த்தவேண்டும் என்று பெரிய அளவில் போராட்டம் நடத்தின.

முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அரச ஊழியர்களின் சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவினால் உயர்த்திய போதிலும், குறித்த தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தன. அவர்கள் தேசிய மக்கள் சக்திக்கும் வாக்களித்தனர். ஆனால் இன்று என்ன நடந்துள்ளது?

அரச ஊழியர்களின் போராட்டம் மற்றும் பணிப்புறக்கணிப்புக் காரணமாக அவர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக உதய செனவிரத்ன தலைமையில்குழுவொன்றுநியமிக்கப்பட்டது. அந்த குழு சம்பள அதிகரிப்புக்கான பரிந்துரைகளையும் முன்வைத்தது.

முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஸ்திரப்படுத்தியதால், உதய செனவிரத்ன குழுவினால் முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்பை அவரால் நடைமுறைப்படுத்த முடிந்தது. இதன்படி, குறைந்தபட்ச ஊதியத்தை 55,000 ஆகவும், 25,000 ரூபா சம்பள அதிகரிப்பையும் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. ஆனால் ஆட்சி மாற்றத்தால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது - என்றார்.

## வெளிநாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள் காலாவதியாகும்போது விகிதாசார முறையில் மீள வழங்குவதே மத்திய வங்கியின் வழமையான நடைமுறையாகும். புதிய திறைசேரி உண்டியல்கள் இந்த முறையிலேயே வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறன்றி புதிதாக கடன் ஏதும் பெறப்படவில்லை.

அத்துடன் நாட்டில் புதிதாக பணம் அச்சிடப்படவில்லை என்று கூறிய அமைச்சர், அவ்வாறு செய்ய முடியாது. அவ்வாறு புதிதாக பணம் அச்சிடப்பட்டிருந்தால் புதிதாக அச்சிடப்படும் நாணயத் தாள்களில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் கையொப்பம் இருக்கவேண்டும். இந்த வகையில் ஒரு பில்லியன் ரூபா நாணயம் புதிதாக அச்சிடப்பட்டுள்ளதாக பரப்பப்படும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir




# லண்டனிலிருந்து உறவினரை பார்க்கவந்தவர் திடீர் சாவு

## கல்வியங்காட்டில் சம்பவம்


லண்டனிலிருந்து உறவினரைப் பார்க்க வந்தவர் மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு திடீரென உயிரிழந்துள்ளார்.

கணேசராசா தியாகராசா (வயது-56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கல்வியங்காட்டிலுள்ள உறவினரைப் பார்ப்பதற்காக லண்டனிலிருந்து வந்த இவர், ஒக்டோபர் 17ஆம் திகதி பஸ்ஸில் சென்றுள்ளார்.

பஸ்ஸில் மயங்கிய நிலையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (05)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவரை காணவில்லையாம்



ஹற்றன்ஸ்டெரதன் தோட்டத்தை வசிப்பிடமாகக்கொண்ட பி.மனோகரன் (வயது 65) என்பவர் ஹற்றன் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் கடந்த 2 ஆம்திகதிபுதன்கிழமை காணாமல் போயுள்ளார் என நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு சந்தர்ப்பங்களில் இவர் இவ்வாறு வைத்தியசாலையிலிருந்து செல்லும் போது தடுக்கப்பட்டிருக்கின்றார். கடைசியாக இவர் நீல நிற சட்டையும் நீல நிற சாரமும் அணிந்திருந்தார் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையம் அல்லது நோர்வூட் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. அல்லது அவரது மகனின் 077-3399752 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை சுவிட்ஸர்லாந்து அல்ல என்பதைப் பிரதமர் புரிந்துகொண்டமையையிட்டு மகிழ்ச்சியடைந்தோம்!

## பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவிப்பு



வீதி தடைகளையும் பாதுகாப்பு அரண்களையும் நீக்கி, பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த வீதிகளை திறந்து விட்டுள்ளதன் மூலம் நாடு பாதுகாப்பான நிலையில் இருப்பதாக அரசாங்கம் நினைக்கக்கூடாது. பாதுகாப்பு அரண்களை அகற்றுவதாக இருந்தால் நாட்டின் புலனாய்வு துறையை அரசாங்கம் பலப்படுத்த வேண்டும்.

அத்துடன் இந்த நாடு சுவிசர்லாந்து அல்ல என்பதை பிரதமர் புரிந்துகொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம் என முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணி தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரத்துக்கு வந்ததுடன் நாட்டின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு, பல வருட காலமாக மூடப்பட்டிருந்த வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. அங்கு வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்கள் அகற்றப்பட்டன.

இதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு உறுதியாகி இருப்பதாக அரசாங்கம் சிறுபிள்ளைத்தனமாக நினைத்துவிடக்கூடாது. தேசிய பாதுகாப்பு என்பது மிகவும் விஸ்தீரமானதாகும்.

அதனால் பாதுகாப்பு கருதி மூடப்பட்டிருந்த வீதிகளை மீண்டும் திறப்பதாக இருந்தால் எமது புலனாய்வு துறையை பலப்படுத்த வேண்டும். அவர்களின் மன நிலையை உயர்ந்த மட்டத்தில் வைக்க வேண்டும்.

ஆனால் எமக்கு கிடைத்த தகவலுக்கமைய எமது புலனாய்வு துறையினரின் மன நிலை வீழ்ச்சியடைந்திருக்கிறது. அவர்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

புலனாய்வு பிரிவின் பிரதானி ஜெனரல் சுரேஸ் சலேயை அந்த பதவியில் இருந்து உடனடியாக நீக்கி இருப்பது குறித்து நாங்கள் ஆச்சரியமடைகிறோம்.

முக்கியமான பதவியில் இருக்கும் ஒருவரை அவ்வாறு திடீரென நீக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு. அவருடன் தனிப்பட்ட பிரச்சினைகள் இருந்தாலும், அவருக்கு அடுத்தபடியாக அந்த பதவிக்கு வர இருப்பவருக்கு.

அவரின் அனுபவங்களை பெற்றுக்கொள்ள சிறிதுகாலம் அந்த பதவியில் அவரை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செயற்பட்டிருந்தால், அறுகம்பே சம்பந்தமான நிலை ஏற்பட்டிருக்காது.

தனிப்பட்ட விடயங்களுக்காக நாட்டின் பாதுகாப்பை பலவீனப்படுத்த வேண்டாம் என அரசாங்கத்திடம் கேட்டுக்காளெகிறோம். அத்துடன் எமது நாடு சுவிட்சர்லாந்து அல்ல.

அதனால் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் என பாதுகாப்பு பிரிவினர் பிரதமருக்கு தெரிவித்ததாக பிரதமர் தெரிவித்திருந்தார். இந்த நாடு சுவிட்சர்லாந்து அல்ல என்பதை பிரதமர் புரிந்துகொண்டதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

ஏனெனில் அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் பிரபுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு தொடர்பாகவும் அந்த பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள், பாதுகாப்புக்காக செல்லும் வாகனம் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை தெரிவித்தார்கள்.

ஆனால் அந்த பதவிக்கு வந்த பின்னர் அந்த பாதுகாப்பு வழங்கப்படுவது நபருக்கு அல்ல, அந்த பதவிக்கு என்பதை தற்போது பிரதமர் புரிந்துகொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எங்களுக்கு எப்படிவேண்டுமானாலும் கதைக்கலாம். ஆனால் ஆட்சி செய்யும்போது, பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்டே நாங்கள் செயற்பட வேண்டும் என்பதை மக்கள் விடுதலை முன்னணி தற்போதாவது உணர்ந்துகொள்ள வேண்டும். – என்றார்.(05)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 41,866 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2024இல் வெளியிடப்பெற்றது